**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.84/2025

Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கார்த்தி முருகன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : கதிரேசன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

19.02.2026

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தேவகுறிச்சி கிராமத்தில் குடியிருந்து தற்போது ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு மச்சான் உறவு முறை வேண்டும். கடந்த 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும், எனது பெரியப்பா மயில்வாகனன் மகன் திவாகர் என்பவரும் பொதிக்குளம் விலக்கு ரோடு அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. அதனால் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்தோம். இது குறித்து இளஞ்செம்பூர் போலிசாரிடம் சொன்னபோது போலிசார் என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார்கள். அந்த தாளில் என்ன விபரங்கள்

இருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 08.03.2025ம் தேதி இரவு 07.30 மணியளவில் மேற்படி முதல்விசாரணையில் கூறிய சம்பவ இடத்தில் நானும், திவாகர் என்பவரும்பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எங்களை பார்த்து ஆபாச வார்த்தைகளால் பேசி அவர் கையில் மறைத்து வைத்திருந்த உருட்டுக்கட்டையால் என்னையும், திவாகரையும் தாக்கி காயம் ஏற்படுத்தினார் என்றாலும், எங்கள் சத்தம்கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த ஆஜர் எதிரியானவர் கொலைமிரட்டல் விடுத்துவிட்டு சென்றதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்பதால் அவருடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.